கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 வருடங்கள் 22.02.2002 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 28.05.2012

முதற்பக்கம்
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயலநடேசன்
வளர்பிறை
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (50)

### 50.ஆண்ட தமிழன், ஆட்சியை இழந்த நிலையிலும் ஆடிய ஆட்டம்!


K.P.Ratnam

பண்டிதர் கா.பொ.இரத்தினம் 1965 பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் கிளிநொச்சி தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகியிருந்தார். பொதுவாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதியை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்யவும், தொகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்கவுமே முயல்வர். ஆனால் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்றிலிருந்து இன்றுவரை அந்த முயற்சிகளில் ஒருபோதும் ஈடுபடுவதில்லை.

அப்படி ஏதாவது செய்வதானால் தமது நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே செய்வர். மற்றும்படி 'தமிழ் தமிழ'; என கூச்சல் போட்டு தமிழ் மக்களுக்கு உசுப்பேத்தி வெற்றிகரமாக வாக்கு வேட்டை செய்துவிடுவர். கா.பொ.இரத்தினம் மற்றைய தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் விட மேலும் வித்தியாசமானவர். பிரச்சாரத்துக்காக தன்னுடைய பெயர் பத்திரிகைகளில் எப்பொழுதும் வரும்படி பார்த்துக் கொள்வார். அதற்கு அவர் தேர்ந்தெடுத்த வழி சிங்களத்தில் தமக்கு வரும் கடிதங்களைத் திருப்பி அனுப்பிவிட்டு, அதை செய்தியாக பத்திரிகைகளில் வரச்செய்து விடுவார்.

ஆனால் அவர் பிரதானமாக செய்யும் 'பணி' அரசாங்க பணிமனைகளிலும், ஒவ்வொரு ஊரிலும் தனது கையாட்களை வைத்து, யாராவது தனக்கு மாறுபாடான கருத்துடன் செயல்படுகிறார்களா என அறிந்துகொண்டு, அவர்களைப் பழிவாங்கும் நோக்குடன் போக்குவரத்து வசதி இல்லாத, தண்ணி இல்லாத காட்டுக்கு அவர்களை இடமாற்றம் செய்வது. அதுவும் அன்றைய டட்லி சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக்கட்சி அரசில் தமிழரசுக் கட்சியும் அங்கம் வகித்துக்கொண்டு இருந்ததால், அவர் தனது நோக்கங்களை சுலபமாக நிறைவேற்றிக் கொண்டார்.

அவரது இந்த நடவடிக்கைகள் காரணமாக, கிளிநொச்சித் தொகுதியில் ஒருசில தமிழ் வாத்திமாரைத் தவிர, ஏனைய அரசாங்க ஊழியர்கள் யாவரும் கா.பொ.இரத்தினத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் எதிராக மாறியிருந்தனர். (1970 பொதுத்தேர்தலில் கிளிநொச்சி தொகுதியில் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வீ.ஆனந்தசங்கரி, தமிழரசுக் கட்சி வேட்பாளரைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடியதிற்கு இதுவும் ஒரு காரணம்) ஆனாலும் அவர் அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் தனது பழிவாங்கும் நடவடிக்கையை இறுதிவரை தொடர்ந்த கொண்டுதான் இருந்தார்.

அவரது நடவடிக்கைகள் தனது தொகுதி மட்டத்துடன் நின்றிருந்தால் பரவாயில்லை. அவர் அதையும் மிஞ்சி வேறு விவகாரங்களில் தனது அசிங்கத்தனமான கையை வைத்ததுதான் மிகவும் பாரதூரமான விடயம். அந்த விடயம் அப்போதைய கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்காவின் கிளிநொச்சி வருகையுடன் சம்பந்தப்பட்டு இருந்த காரணத்தால், மிகவும் பாரதூரமான ஒன்றாகும். அத்துடன் அவரை அங்கு அழைத்த எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும், அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனமும் ஸ்தாபன ரீதியாக தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளை விட கிளிநொச்சியில் மிகவும் பலமான நிலையிலும், எதற்கும் முகம் கொடுக்கக்கூடிய நிலையிலும் இருந்ததால், கா.பொ.இரத்தினத்தின் நடவடிக்கை ஒரு புயலையே அங்கு கிளப்பியது.

சுதந்திர இலங்கையில் எந்தவொரு பிரஜையும் நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் தங்கு தடையின்றி போய்வர முடியும். அதிலும் அரசு அதிகாரத்தின் அதி உயர் சபையான பாராளுமன்றத்தின் பிரதிநிதி ஒருவர் தனது தொகுதியில் மட்டுமின்றி, நாட்டின் எப்பகுதி மக்களினதும் குறைகளை அப்பகுதிக்குச் சென்று கேட்க முடியும். இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் வெள்ளையர்களான பிரித்தானியரின் ஆட்சி நிலவிய காலத்தில் மட்டுமே, அவர்கள் செல்லும் சில இடங்களுக்கு (பொது பூங்காக்களுக்குக்கூட) கறுப்பு நிறத்தவர்களான இலங்கையர்கள் செல்ல முடியாது.

இத்தகைய ஒரு நிலை மேற்கத்தைய காலனித்துவ ஆட்சி நிலவிய பல நாடுகளில் இருந்துள்ளது. நான் ஒருமுறை சீனா சென்றிருந்த போது, 1949ல் கம்யூனிஸ்ட்டுகள் தலைமையில் புரட்சி நடந்து நிலைமை மாற்றமடைவதற்கு முன்னர், "நாய்களும் சீனர்களும் உள் நுழையக்கூடாது" என முன்னர் காலனித்துவ ஆட்சியாளர்களால் பெயர்ப்பலகை பொறிக்கப்பட்டிருந்த ஒரு பூங்காவைப் பார்க்கும் ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.



அப்படியான ஒரு நிலையை இலங்கையின் சிறுபான்மை இனமொன்றைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான பண்டிதர் கா.பொ.இரத்தினம், பெரும்பான்மை இனத்தவர் மட்டுமின்றி, தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை சிறுபான்மை இனங்களான தமிழ் – முஸ்லீம் மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட – சுரண்டப்பட்ட மக்களுக்காகவும் எப்பொழுதும் பயன்படுத்தி வந்த தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்காவுக்கு எதிராக உருவாக்க முற்பட்டதுதான், அவரதும் அவர் சார்ந்த தமிழரசுக் கட்சியினதும் கட்சியினதும் அயோக்கியத்தனத்துக்கு உதாரணமாகும்.

எஸ்.டி.பண்டாரநாயக்கா கிளிநொச்சி வருகிறார் என்று அறிந்தவுடன், அதைத் தடுப்பதற்கான முயற்சியில் கா.பொ.இரத்தினம் தீவிரமாக இறங்கினார். ஆனால் அதை அவர் நேரடியாகச் செய்ய முடியாது. எனவே எஸ்டி.பண்டாரநாயக்கா கலந்து கொள்ளும் சில நிகழ்ச்சிகளுக்கு தடை விதிக்க அரச அதிகாரிகளை நாடினார். கிளிநொச்சி தொகுதி அரச குடியேற்றங்கள் நிறைந்த தொகுதியாகும். அந்த அரச குடியேற்றங்களில் பொதுமக்களுக்கு காணிகள் பங்கிட்டளிக்கப்பட்டிருந்தாலும், அவை உறுதிக் காணிகள் அல்ல. பெர்மிட் பத்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்ட காணிகள். (அந்தக் காணிகளை சட்டப்படி ஈடு வைக்கவோ, நீதிமன்றங்களில் உறுதிப் பிணையாக சமர்ப்பிக்கவோ, சட்டப்படி விற்கவோ முடியாது) அந்தக் காணிகளின் பெர்மிட்டுகளை காணி அதிகாரிகள் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி எந்த நேரமும் இரத்துச் செய்ய முடியும்.

எஸ்.டியின் கிளிநொச்சி விஜயத்தின் போது, கிளிநொச்சி நகரை அண்டியுள்ள திருவையாறு படித்த வாலிபர் திட்டத்துக்கும், பரந்தன் – முல்லைத்தீவு வீதியிலிருந்த விசுவமடு படித்த வாலிபர் திட்டத்துக்கும் செல்வதும் உள்ளடங்கியிருந்தது. அத்துடன் மிருசுவிலில் அமைந்திருந்த படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்துக்கும் செல்ல ஏற்பாடாகி இருந்தது. இந்த இடங்களில் காணி பெற்றிருந்த பெரும்பாலோர் எமது விவசாயிகள் சங்கத்தில் உறுப்பினராக இருந்தனர்.


S.W.R.D Bandaranayakke

எஸ்.டி.பண்டாரநாயக்கா திருவையாறு குடியேற்றத் திட்டத்துக்கு வருகை தருவதற்கு முதல் நாள், அங்கு பொறுப்பாக இருந்த குடியேற்றத் திட்ட அதிகாரியிடம் (Colonization Officer) நேரடியாக வருகை தந்த அப்போதைய கிளிநொச்சி காரியாதிகாரி (D.R.O – இப்போதைய உதவி அரசாங்க அதிபர்) இ.யோகநாதன், கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.டி.பண்டாரநாயக்கவை திருவையாறு படித்த வாலிபர் திட்டத்துக்குள் உள்நுழைய அனுமதிக்கக்கூடாது என, அப்போதைய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரவிடம் இருந்து தனக்கு அறிவித்தல் வந்துள்ளதாகத் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

இந்தச் செய்தி அப்பொழுது திருவையாறு முதலாம் படிவத்தில் மட்டும் காணி பெற்றிருந்த 102 வாலிபர்களையும் கொதிப்பேற்றிவிட்டது. அப்பொழுது அங்கு குடியேற்றத் திட்ட அதிகாரியாக இருந்தவர் ஆ.துரைராஜா. அவர் கரவெட்டி ஆசிர்வாதம் தம்பதிகளின் புதல்வர். நேர்மையானவர். குடியேற்றத் திட்ட இளைஞர்களின் அன்பைப் பெற்றவர். அவரது தந்தையாரும் தாயாரும் இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் கனிஸ்ட பாடசாலையில் அதிபராகவும் ஆசிரியராகவும் கல்வி கற்பித்த காலத்தில், நான் அவர்களிடம் இரண்டாம் வகுப்பு வரை கல்வி கற்றிருக்கிறேன். அவர்களுக்கு பரந்தன் பகுதியில் நெல் வயலும் வீடும் உண்டு. அதன் காரணமாக துரைராஜா எம்மீது அனுதாபமாக இருந்ததுடன், கா.பொ.இரத்தினத்தின் பழிவாங்கும் அரசியலுக்கும் எதிராக இருந்த ஒருவராவார்.


Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-1)
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-2)
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (1)
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (2)

அரசாங்க அதிபரின் தடைச் செய்தியை எடுத்து வந்த இ.யோகநாதன் அவர்களும் அப்பொழுது எம்முடன் நேசமானவராகவே இருந்தார். அதற்கொரு காரணம், அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அவர்களிடம் கல்வி கற்றமையாகும். தோழர் கார்த்திகேசன் மீது இருந்த ஈடுபாட்டின் காரணமாக தேர்தல் காலங்களில் யோகநாதனின் குடும்பத்தவர்கள் கார்த்திகேசனையே ஆதரித்து வந்தனர். திரு.யோகநாதன் அவர்கள் கிளிநொச்சி காரியாதிகாரியாகப் பொறுப்பேற்க வந்தவுடன், முதன்முதலாக அவருக்கு அங்குள்ள அரச உயர் அதிகாரிகளாலும், நண்பர்களாலும் நடாத்தப்பட்ட இராப்போசன விருந்துபசாரத்துக்கு, அப்பொழுது கிளிநொச்சியில் கட்சி – விவசாய சங்கப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்த தோழர் நா.யோகேந்திரநாதனுக்கும் எனக்கும் கூட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என்றால், அதற்கு அந்த தொடர்பே காரணம்.

எனவே அரச அதிபரின் உத்தரவைக் கொண்டுவந்த யோகநாதன், இது முற்றுமுழதாக கா.பொ.இரத்தினத்தின் வேலை என்பதை இரகசியமாகத் தெரிவித்ததுடன், தந்திரோபாயமாக எஸ்.டியின் கூட்டத்தை வெற்றிகரமாக நடாத்தி முடிக்கும்படியும் சொல்லிச் சென்றார். (அவர் பின்னைய காலங்களில் பதவி உயர்வு பெற்று மட்டக்களப்பு அரசாங்க அதிபராகவும் பணி புரிந்தார்) இப்படியான ஒரு இக்கட்டான சூழ்நிலையில், குடியேற்றத் திட்ட அதிகாரி துரைராஜா அவர்களை எந்தவொரு கட்டத்திலும் சிக்கலில் மாட்ட நாம் விரும்பவில்லை. எனவே கூட்ட ஒழுங்குகள் குறித்து திருவையாறு படித்த வாலிபர் திட்ட இளம் விவசாயிகளுடன் நாம் கலந்தாலோசித்தோம். அவர்கள் துணிகரமாகவும் சிறப்பாகவும் ஒரு ஆலோசனையை முன்வைத்தனர். சில வேளைகளில் 'மெத்தப்படித்த' மேதாவிகளை விட, சாதாரண மக்களின் ஆலோசனைகள் பயனும் சக்தியும் வாய்ந்தவை என்பதற்கு அவர்கள் வழங்கிய ஆலோசனை ஒரு உதாரணம்.

அவர்களது ஆலோசனைப்படி, அன்றைய தினம் குடியேற்றத் திட்ட அதிகாரி துரைராஜா, எஸ்.டி.பண்டாரநாயக்கா கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் எதிலும் கலந்துகொள்ளத் தேவையில்லை. அதேவேளையில் அங்குள்ள காரியாலயத்தில் உள்ள தளபாடங்கள் குடியேற்றவாசிகளுக்குச் சொந்தமானது என்றபடியால், அவற்றை எடுத்து வந்து முன்னால் உள்ள வீதியில் போட்டு கூட்டத்தை நடாத்துவது. அவர்கள் திட்டப்படியே தளபாடங்கள் யாவும் எடுத்துவரப்பட்டு, வீதியில் நின்ற முதிரை மர நிழலில் போடப்பட்டு கூட்டம் சிறப்பாக நடாத்தப்பட்டது.

பாருங்கள்! இன்றும் மூச்சுக்கு மூச்சு 'சிங்களவனின் அடக்குமுறை' பற்றியும், 'தமிழனின் பெருமை' பற்றியும் பேசும் இந்த தமிழ் தேசியப் 'பண்டிதர்கள்';, இலங்கை மக்களின் பெரு மதிப்புக்கும் கண்ணியத்துக்கும் உரிய ஒரு அரசியல் தலைவருக்கு, அதுவும் தனது ஒரு சக பாராளுமன்ற உறுப்பினருக்கு தனது தொகுதியில் கொடுத்த கௌரவத்தை!

அதேநேரத்தில் கா.பொ.இரத்தினத்தின் இந்த அசிங்கமான செய்கையைக் கேள்விப்பட்ட, அப்பொழுது கிளிநொச்சி பட்டினசபையின் தலைவராக இருந்த (அதற்கு முதல் அது கரைச்சி கிராம சபையாக இருந்த போதும் தலைவராக இருந்த) வீ.ஆனந்தசங்கரி, தான் நீண்டகாலம் உறுப்புரிமை பெற்றிருந்த லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து விலகி தமிழ் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்திருந்த போதிலும், அதையும் பொருட்படுத்தாது திருவையாறுக்கு விரைந்து வந்து அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது மட்டுமின்றி, எஸ்.டிபண்டாரநாயக்காவின் ஆங்கில உரையைத் தமிழில் மொழிபெயர்த்ததுடன், எஸ்.டிபண்டாரநாயக்காவையும் எம்மில் சிலரையும் கரடிப்போக்கு சந்தியிலிருந்த தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று மதிய போசனம் தந்ததுடன், எஸ்டி.பண்டாரநாயக்கா மாலை நிகழ்ச்சிக்கு விசுவமடு செல்வதற்காக தனது செலவில் வாடகைக் கார் ஒன்றையும் ஏற்பாடு செய்து தந்தார்.

தொடரும

முன்னைய பதிவுகள்